RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 258 | செப்டம்பர்.19 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



■ மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் தனக்கன் குளம் ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில்மணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தண்டபாணி, வட்டாட்சியர் கவிதா கிராம நிர்வாக அலுவலர் விஜயலெட்சுமி ஊராட்சி தனக்கன்குளம் செயலாளர் பிரபு, விஜயபாஸ்கர் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று தங்களது கோரிக்கை மனுக்களை அளித்தனர்.



# கல்லலில் திமுக அலுவலகம் திறப்பு

## ஒசெ. நெடுஞ்செழியன் தலைமையில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் திறந்து வைத்தார்

கல்லல். செப்.19

சிவகங்கை மாவட்டம் கல்லல் கிழக்கு ஒன்றிய திமுக புதிய அலுவலகத்தை, தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர், சிவகங்கை மாவட்டக்கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்...

முன்னதாக அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களை வரவேற்கும் விதமாக ஆரத்தி எடுத்து வரவேற்றனர்..

கல்லல் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் ந. நெடுஞ்செழியன் ஏற்பாட்டில் தொடங்கபட்ட புதிய அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் சேர்மன் சேங்கைமாறன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் கல்லல் கரு. அசோகன் , வணக்கத்திற்குரிய துணை மேயர், ம்நகர்க்கழக திமுக செயலாளர் நா. குணசேகரன் , ஒன்றிய செயலாளர்கள் குன்றக்குடி சுப்பிரமணியன் , கோட்டையூர் டாக்டர் ஆனந்த், மாவட்ட இளைஞரணி பரணிகிட்டு , ஒன்றிய இளைஞரணி கட்டத்தேவன் கார்த்திக் ,ஆறு. சரவணன் , ஒன்றிய நிர்வாகிகள் சுப. வடிவேல், ஜோஸப் , ராஜா, துணைச் செயலாளர் வேப்பங்குளம் செல்வராஜ், முகவை கருணாநிதி , பாடத்தான்பட்டி குமார் , புளியம்பட்டி மனோகரன், குருந்தம்பட்டு நாச்சியப்பன், நாகவயல் ராஜேந்திரன், அரண்மனை சிறுவயல் முத்துராமன், பிரபாகரன், விக்கி , தெய்வேந்திரன், சரவணன் வெள்ளைச்சாமி , சிங்கப்பூர் ராஜா முகமது கனி , அணைத்திடல் ஜாக்குலின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கல்லல் கிழக்கு ஒன்றிய செயலாளர் நா. நெடுஞ்செழியன் சிறப்பாக செய்திருந்தார்.

# கடைசி நிமிடத்தில்கூட பாஜக கூட்டணியில் மாற்றங்கள் வரலாம்: நயினார் நாகேந்திரன் நம்பிக்கை



சென்னை: செப்.19-

பாஜக கூட்டணியில் கடைசி நிமிடத்தில் கூட மாற்றங்கள் வரலாம் என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி பிறந்தநாளை முன்னிட்டு பாஜக சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: குடிசைகளே இருக்கக் கூடாது என்ற பிரதமரின் குறிக்கோளுக்கு ஏற்ப ஜிஎஸ்டி வரி குறைப்பால் கட்டுமானப் பொருட்கள் விலை குறைக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் விலை குறையும்போது, உற்பத்தியும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சந்திப்பை பொருத்த வரை கூட்டணி கட்சித் தலைவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து பேசுவது நல்ல விஷயமாகத்தான் இருக்கும். எதிர்க்கட்சியினரை சந்தித்தால்தான் பிரச்சினை இருக்கிறது எனலாம்.

அதிமுகவை 4 ஆண்டுகள் காப்பாற்றியது பாஜக தான் என்பதை எந்த அர்த்தத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி சொன்னார் என்று தெரியவில்லை. அதே நேரம், அதிமுக ஆட்சியில் மத்திய அரசின் ரூ.40 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை தமிழகத்துக்கு அவர் பெற்றுத் தந்தார். இதற்கு உறுதுணையாக மத்திய அரசு இருந்தது என்ற பொருளில் அவர் சொல்லியிருக்கலாம்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் எதற்காக பாஜகவையும், என்னையும் விமர்சனம் செய்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. அவர்தான் பழனிசாமி முதல்வராக வர வேண்டும், அமித் ஷா சொன்னால் பிரச்சாரம் செய்வோம் என்றார். இப்போது இப்படி பேசுவது ஏன் எனத் தெரியவில்லை. இதற்கிடையே, வில்லிபுத்தூரில் என்னை நண்பர் என்றும் அவர் கூறியுள்ளார். அரசியலில் எல்லாருமே எனக்கு நண்பர்கள் தான்.

பாஜக அடுத்த கட்சி பிரச்சினையில் தலையிடாது. தேர்தலுக்கு இன்னும் 6 மாதம் இருக்கிறது. கடைசி நிமிடங்களில் கூட மாற்றம் வரலாம். பாமக, அதிமுக கட்சிகளில் பிரச்சினைகள் உள்ளன. புயலுக்குப் பிறகுதான் அமுத மழை பொழியும். அதுபோல பிரச்சினைக்கு பிறகு நல்ல தீர்வு கிடைக்கும். முத்துராமலிங்க தேவருக்கு பாரத ரத்னா விருது பற்றி மத்திய அரசு முடிவெடுக்கும்.

# அனைத்து கட்சிகளுக்கும் பொருந்தும் வகையில் பொதுக்கூட்ட விதிமுறைகள்

## தவெக வழக்கில் உயர் நீதிமன்றம் உத்தரவு


சென்னை: செப்.19-

அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு அனுமதியளிக்கும் போது, அனைத்து கட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் விதிமுறைகளை வகுக்கவும், பொதுச் சொத்துகள் சேதமடைந்தால் அதற்கான இழப்பீட்டை வசூலிக்கும் விதமாக ஒரு குறிப்பிட்ட தொகையை டெபாசிட் செய்யும் வகையில் விதிமுறைகளை வகுக்கவும் தமிழக காவல்துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்ய உள்ளார். கடந்த செப்.13ம் தேதி திருச்சியில் பிரச்சாரத்தை தொடங்கிய அவர், செப்டம்பர் 20ம் தேதி முதல் டிசம்பர் 20ம் தேதி வரை ஒவ்வோரு வாரம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்ய உள்ளதாக கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி பிரச்சாரத்துக்கு கடுமையான நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, விஜய் பிரச்சாரத்துக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்களை எந்த பாரபட்சமும் இன்றி பரிசீலித்து, அனுமதி வழங்க மாநிலம் முழுவதும் உள்ள காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்க டிஜிபிக்கு உத்தரவிடக் கோரி, த.வெ.க. துணைப் பொதுச்செயலாளர் நிர்மல்குமார் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.





ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் பேரணி, பொதுக்கூட்டங்களுக்கு அவர்கள் விரும்பிய இடத்தில் காவல்துறை அனுமதி வழங்குவதாகவும், அதேபோல தவெகவுக்கு பாரபட்சமின்றி அனுமதி வழங்கக் கோரியும் கடந்த செப்.9 மற்றும் செப்.15ம் தேதிகளில் டிஜிபியிடம் கட்சி சார்பில் மனு அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, த.வெ.க சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் வி.ராகவாச்சாரி, நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளையும், மற்ற கட்சிகள் மீது விதிக்கப்படாத நிபந்தனைகளும் த.வெ.க.வுக்கு விதிக்கப்படுவதாக" வாதிட்டார்.

எந்த வழியாக சென்னை திரும்ப வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும், எத்தனை வாகனங்கள் வர வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டதாகவும் வழக்கறிஞர் வாதிட்டார்.

மேலும், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வரக்கூடாது என நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அவர்களை வர வேண்டாம் என நாங்கள் எப்படி சொல்ல முடியும் எனவும் வழக்கறிஞர் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அப்போது, இது போன்ற நிபந்தனைகள் அனைத்து கட்சிகளுக்கும் விதிக்கப்படுவது தானே ? என வினவிய நீதிபதி, முழுமையாக போக்குவரத்து பாதிக்கப்பட்டால் மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா ? யாரும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல. பொதுக்கூட்டம் நடத்தினாலும் சட்டத்திற்கு உட்பட்டு நடத்த வேண்டும்.

தலைவராக இருக்கும் நீங்கள் தான் கூட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும். சேதப்படுத்தப்பட்ட பொது சொத்துகளுக்கான இழப்பீடு வசூலிக்கப் பட்டதா ? இல்லையென்றால் இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட நேரிடும் எனவும் நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து பேசிய நீதிபதி, "கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வர வேண்டாம் என கோரிக்கை விடுத்து மற்றவர்களுக்கு நீங்கள் முன் மாதிரியாக திகழலாமே?" என அறிவுறுத்தினார்.

அப்போது, காவல்துறை சார்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ராஜ் திலக், "எந்த இடத்திலும் அனுமதி மறுக்கப்படாமல், நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுவதாக" வாதிட்டார். மேலும், திருச்சி பரப்புரையின் போது தவெக தொண்டர்களின் செயல்களை புகைப்படமாகவும் காவல்துறை வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அதனை பார்த்த நீதிபதி, "இவர்கள் இது போன்று உயரமான இடங்களில் ஏறி நின்று ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் யார் பொறுப்பேற்பது ? இதனை நீங்கள் ஒழுங்குபடுத்த வேண்டாமா?" எனவும் நீதிபதி கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து அனைத்து கட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் விதிமுறைகளை வகுக்கவும் பொதுச் சொத்துகள் சேதமடைந்தால் அதற்கான இழப்பீட்டை வசூலிக்கும் விதமாக ஒரு குறிப்பிட்ட தொகையை டெபாசிட் செய்யும் வகையில் விதிமுறைகளை வகுக்க தமிழக காவல்துறைக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும், விதிமுறைகள் வகுப்பது குறித்து காவல்துறை பதிலளிக்க உத்தரவிட்ட நீதிபதி வழக்கை செப்டம்பர் 24ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# சேலத்திற்கு பல திட்டங்களை தந்திருக்கும் தமிழக அரசு! உதயநிதியை உச்சிகுளிர வைத்த பாமக எம்எல்ஏக்கள்




சேலம், செப்.19-

அப்பாவும் பிள்ளையும் ஆளுக்கொரு பக்கமாக ரெண்டுபட்டு நிற்கும் பாமகவில் அன்புமணி கோஷ்டி ஆளும் கட்சியை அநியாயத்துக்கு போட்டுத் தாக்கி வருகிறது. இதனால், இயல்பாகவே அய்யா கோஷ்டி ஆளும்கட்சியை அனுசரித்து நிற்கிறது. இந்த நிலையில், சேலத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இரண்டு கோஷ்டிகளையும் சேர்ந்த பாமக எம்எல்ஏக்கள் திமுக ஆட்சிக்கு திடீர் புகழாரம் சூட்டி திகைக்க வைத்தார்கள்.

சேலம் மேற்கு தொகுதி பாமக எம்எல்ஏவான அருள் மருத்துவர் ராமதாஸ் அணியில் இருக்கிறார். இவர் தான் பாமக உட்கட்சி விவகாரம் தொடர்பாக அன்புமணிக்கு எதிரான கருத்துகளை பதிவு செய்து வருகிறார். அதேசமயம் மேட்டூர் தொகுதி பாமக எம்எல்ஏவான சதாசிவம், அன்புமணி விசுவாசியாக தன்னை அடையாளம் காட்டிக் கொண்டு நிற்கிறார்.

கட்சி ரெண்டுபடுவதற்கு முன்னதாக சேலம் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாக்களில் அருளும் சாதாசிவமும் ஒன்றாகவே வந்து கலந்துகொள்வார்கள். ஆனால், பாமக ரெண்டுபட்டு பலகீனப்பட்டுப் போன பிறகு இருவரும் சம்பிரதாயத்துக்காகக் கூட சந்தித்துக் கொள்ள தயங்குகிறார்கள். அரசு விழாக்களில் கலந்து கொண்டாலும் ஆளுக்கொரு திசையில் வந்து உட்கார்ந்து இருந்துவிட்டுப் போவதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.3,500 கோடி வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கும் நிகழ்ச்சிக்காக 16ம் தேதி சேலம் வந்திருந்தார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். இந்த நிகழ்ச்சிக்கான மேடையிலும் அருளும் சதாசிவமும் வழக்கம் போல ஆளுக்கொரு பக்கத்தில் தான் உட்கார்ந்திருந்தனர். ஆனால், இருவரும் திசைக்கொருவராய் இருந்தாலும் திமுக அரசை ஒருமித்த குரலில் பாராட்டிப் பேசி உதயநிதியையே உச்சிகுளிர வைத்துவிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பாமக எம்எல்ஏக்கள் இருவருமே, சேலம் மாவட்டத்துக்கு தமிழக அரசு பல திட்டங்களை செய்து கொடுத்திருப்பதாக பாராட்டியதுடன், தங்களது தொகுதியில் மேலும் தேவைகள் இருப்பதால் அதற்கான திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும் என்று பேசினர். அதிலும் அன்புமணி கோஷ்டி எம்எல்ஏவான சதாசிவம் பேசுகையில், "மாற்றுக் கட்சியினர் என்றும் பாராமல் எங்களை துணை முதல்வர் விழாவுக்கு அழைத்திருப்பது சிறப்பானது" என்று குளிரவைத்தார்.

இதை மேற்கோள்காட்டி பேசிய உதயநிதி, "இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கும் இரண்டு எம்எல்ஏக்களுமே நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் கிடையாது; நமது கூட்டணியைச் சேர்ந்தவர்களும் கிடையாது" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட அருள், "இப்ப கூட்டணியில் இல்லை" என்று எடுத்துக் கொடுத்து சிரித்தார். அதை அர்த்தமாய் சிரித்தபடி ஆமோதித்த உதயநிதி, "ஆமாம்... இப்போது கூட்டணியில் இல்லை. ஆனாலும் இருவருமே நமது அரசை போட்டி போட்டுக்கொண்டு பாராட்டியுள்ளனர். அவர்கள் இருவரும் ஒருமித்து பாராட்டியுள்ளனர். இதேபோல், அவர்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும்" என்றார்.

இந்த நிகழ்ச்சி முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அருள், "சேலம் மாநகரின் 45 சதவீதம் பகுதியானது எனது சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குள் வருகிறது. தொகுதியின் சில பகுதிகளில் சாக்கடை வசதி இல்லை. எனவே, அதற்கான சிறப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தரக்கோரி சிறப்புத் திட்ட அமலாக்கத்துறையின் அமைச்சரான உதயநிதி ஸ்டாலினிடம் தான் கேட்க முடியும். அதற்காகத்தான் இந்த விழாவில் கலந்து கொண்டு அவரிடம் எனது கோரிக்கைகளை வைத்துள்ளேன்" என்றார்.

நீங்களும் சதாசிவமும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் உதயநிதி அட்வைஸ் செய்தாரே... என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "எங்களிடம் போட்டி இல்லை... பொறாமை இல்லை. எங்களை உருவாக்கியவர் டாக்டர் ஐயா. திமுகவுடன் முதலில் கூட்டணியில் இருந்தோம். இப்போது இல்லை என்பதைத்தான் அப்படிச் சொன்னேன்" என்று கெட்டிக்காரத்தனமாக பதில் சொன்னார் அருள்!

# அமைச்சர் பி.மூர்த்தி வைகை அணையிலிருந்து ஒரு போக பாசனத்திற்கான தண்ணீரை திறந்து வைத்தார்கள்



தேனி, செப்.19-

தேனி மாவட்டம். வைகை அணையிலிருந்து ஒருபோக பாசனத்திற்கு தண்ணீரை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., அவர்கள். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப., அவர்கள். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ. சரவணன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தேனி மாவட்டம், வைகை அணையிலிருந்து பெரியாறு பாசனப்பகுதியில் ஒரு போக பாசனப் பரப்பாகிய 85,563 ஏக்கர் நிலங்களுக்கு மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள ஒரு போக பாசனப் பரப்பாகிய 19,439 நிலங்களுக்கு ஆக மொத்தம் 1,05,002 ஏக்கர் நிலங்களுக்கு வினாடிக்கு 1,130 கனஅடி வீதம் 45 நாட்களுக்கு முழுமையாகவும், 75 நாட்களுக்கு முறை வைத்தும் இன்று முதல் மொத்தம் 120 நாட்களுக்கு 8,493 மில்லியன் கன அடி நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் மூலம், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட 53 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்திற்குட்பட்ட 5,697 ஏக்கர் நிலங்களும், மதுரை வடக்கு வட்டத்திற்குட்பட்ட 24,811 ஏக்கர் நிலங்களும், மேலூர் வட்டத்திற்குட்பட்ட 48,963 ஏக்கர் நிலங்களும், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட 478 ஏக்கர் நிலங்களும், சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட 5,561 ஏக்கர் நிலங்களும், திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட 146 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்திற்குட்பட்ட 1,201 ஏக்கர் நிலங்களும், உசிலம்பட்டி வட்டத்திற்குட்பட்ட 13,723 ஏக்கர் நிலங்களும், திருமங்கலம் வட்டத்திற்குட்பட்ட 3,982 ஏக்கர் நிலங்களும், பேரையுர் வட்டத்திற்குட்பட்ட 387 ஏக்கர் நிலங்களுக்கும், என மொத்தம் 1,05,002 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி பெறும் வகையில் தண்ணீர் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே, மதுரை, திண்டுக்கல் மற்றம் சிவகங்கை மாவட்டங்களை சார்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் இந்நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர்மகசூல் பெற்று பயன்பெற வேண்டும் என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், செயற்பொறியாளர் திரு.சிவபிரபாகரன், உதவி செயற்பொறியாளர்கள் திரு.சேகரன், திரு.முருகேசன், திரு.குபேந்திரன், வட்டாட்சியர் திரு.மருது பாண்டி மற்றும் விவசாயி சங்கங்களின் பிரநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




## கூட்டுறவு நகர வங்கி மூலம் சிறப்பு லோன் மேளா

ராமநாதபுரம், செப்.19-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி ஐந்து முனைப் பகுதியில் கூட்டுறவு நகர வங்கி லிட் எண் 45 கிளையின் மூலமாக சிறப்பு லோன் மேளா நடைபெற்றது இந்த மேளாவில் பொது மக்களுக்கு வங்கியின் வைப்புத் தொகை நகை கடன் மகளிர் சுய உதவிக் கடன் அரசு திட்ட கடன்கள் பற்றி விளக்கி கூறினர் இந்நிகழ்ச்சி மே. கார்த்திகா கூட்டுறவு சார் பதிவாளர் மேலாண்மை இயக்குனர் முன்னிலையிலும் S.பாண்டி பொது மேலாளர் தலைமையிலும் கி.இளங்கோ உதவி மேலாளர் G. சத்தியசீலன் உதவி மேலாளர் மற்றும் வங்கி பணியாளர்கள் உடன் இருந்தனர் இந்த மேளாவில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



## தாம்பரம் சண்முகம் சாலையில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்கு தவெக சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்

தாம்பரம், செப்.19-

செங்கல்பட்டு வடமேற்கு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் சார்பில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் மிக சிறப்பாக கொண்டாடபட்டது. இதையொட்டி தாம்பரம் சண்முகம் சாலையில் மலர்களால் அலங்கரித்து வைக்கபட்ட தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்க்கு செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட செயலாளர் கில்லி டி.சரத்குமார் தலைமையில் மலர் துவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து தாம்பரம் மேற்கு பகுதி பிரவீன் குமார், பெருங்களத்தூர் தெற்குப் பகுதி எம்.செந்தில் குமார், மாவட்ட இணை செயலாளர் விஜய் தியாகு, மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு பிரவீன் குமார், செம்பாக்கம் அகிலன், வர்த்தக அணி பழனி முருகன் மற்றும் தமிழக வெற்றி கழகம் வடமேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்க்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்



## மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரியில் 300 மாணவ, மாணவியர் ரத்த தானம் செய்தனர்

மேடவாக்கம், செப்.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மேடவாக்கத்தில் உள்ள காயித்தே மில்லத் கல்லூரியின் 50வது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு மாபெரும் ரத்த தானம் முகாம் நடைப்பெற்றது. முகாமிற்கு கல்லூரி செயலாளர் தாவூத் மியாத்கான், முதல்வர் அம்துல் தவாப் ஆகியோர் தலைமை தாங்கினார். இதில் கவிஞர் ஆ.ஜான் தன்ராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்தார். இதில் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர். மாணவர்கள் செய்த ரத்ததானம், சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனை மற்றும் குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைகாக வழஙகப்பட்டது. தொடர்ந்து மாணவர்கள் ரத்ததானம் செய்வது குறித்து கவிஞர் ஆ.ஜான் தன்ராஜ் எழுதிய பாடலும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர்கள் டாக்டர் ஷேக் கலீல், முனைவர் மணிக ண்டன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிடட பலர் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க மையம்நிமிர்ந்து நில் திட்டத்தின் கீழ் இளைஞர் புத்தாக்க மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டம் என்ற நிகழ்ச்சி நேற்று 18/09/2025 நடைபெற்றது. கோவிலூர் ஆதீனம் நாராயண ஞான தேசிக சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். கல்லூரியின் தாளாளர் மா.வீரப்பன் தலைமை உரையாற்றினார்.



## பல்லாவரத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்கு தவெக சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்

பல்லாவரம், செப்.19-

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் சார்பில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் மிக சிறப்பாக கொண்டாடபட்டது. இதை யொட்டி பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் மலர்களால் அலங்கரித்து வைக்கபட்ட தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்க்கு செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் வீ.குமார் தலைமையில் மலர் துவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து மாவட்டம் பகுதி ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் மற்றும் தமிழக வெற்றி கழகம் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்க்கு மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்



## வேங்கைவாசல் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"

வேங்கைவாசல், செப்.19-

செங்கல்பட்டு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட வேங்கை வாசல் ஊராட்சியில் வீரவமுனிவர் தெரு, டபேளா ஹால் (செப் :18) நடைபெற்றது. எம். எல் .ஏ.அரவிந்த் ரமேஷ் வழிகாட்டுதலின்படி, வேங்கைவாசல் ஊராட்சி மன்ற தலைவர், ஜெயச்சந்திரன் அனைவரையும் வரவேற்று பொதுமக்களுக்கு தேவையான வசதிகளையும், உதவிகளையும் செய்து கொடுத்தார். முகாமில்15 துறைகளை சேர்ந்த அரசு அதிகாரிகள் மனுக்களை பெற்று சில துறைகளில் மூலம் உடனக்குடன் தீர்வு காணப்பட்ட சான்றிதழ் மற்றும் நலத்திட்ட உதவி கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகளை வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய பெருந்தலைவர், சங்கீதா பாரதிராஜன் மற்றும் ஊராட்சி செயலர், பார்த்திபன் உள்ளிட்ட அனைத்து துறைகள் சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாமில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் சமபந்தி சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.




## கோவை ராம் நகரில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்

கோவை, செப்.19-

கோவை ராம் நகர் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமினை மாநகர் மாவட்ட கழகச் செயலாளர் நா. கார்த்திக், மத்திய மண்டல குழு தலைவர் மீனா லோகு,மாமன்ற உறுப்பினர் வித்யா ராமநாதன், பகுதி கழக செயலாளர் சேதுராமன், வட்டக் கழக செயலாளர் ராமநாதன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.67க் குட்பட்ட பகுதியிலுள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமினை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு. பயனாளிகளுக்கு உடனடி ஆணையினை வழங்கினார். இந்த சிறப்பு வாய்ந்த முகாமில் பல்வேறு துறைகளை சார்ந்த 400க்கும் மேற்பட்ட சேவைகள் வழங்கப்பட்டது இதில் சொத்து வரி பெயர் மாற்றம், மற்றும் குடிநீர் வரி பெயர் மாற்றம், ஆதார் கார்டு பெயர் மாற்றம் உள்ளிட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் உதவி ஆணையர் முத்துசாமி, உதவி செயற்பொறியாளர் ஹேமலதா, மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன், உதவி பொறியாளர் குமரேசன்,கழக நிர்வாகிகள் ரமேஷ் அப்பு ,பெருமாள் முருகேஷ் ,ராம் நகர் கோவிந்தராஜ், அறுவடை நம்பி, ரத்தினவேல், சதீஷ் மகளிர் அணி நிர்வாகிகள், கீதா, ராஜேஸ்வரி, சமீன் பானு,ருக்மணி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## வேலூர் மாநகராட்சி மண்டலம் 3, ஓட்டேரி 53, 57வது வார்டில், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், செப்.19-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, ஓட்டேரி, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 3, ஓட்டேரியில் உள்ள சுசீ நாடார் தனியார் திருமண மண்டபத்தில் (18.09.2025) நடைபெற்ற தமிழக அரசின் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் மாவட்டஆட்சியர் சுப்புலெட்சுமி, மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து மனுக்களை பெற்றார். இந்நிகழ்வின் போது அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், வேலூர் வட்டாட்சியர் வடிவேல், 53வது வார்டு மாமன்ற உறுப்பினர் பார்பி கதிரவன், 57வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆண்டாள் விநாயகம், மண்டல தலைவர், துணை ஆணையர் முகமது சபக துல்லா, இளநிலை பொறியாளர் பன்னீர்செல்வம், மாநகராட்சி வருவாய் துறை குமரவேல், சுகாதார ஆய்வாளர் சிவகுமார், உட்பட பலர் உடனிருந்தனர்.

# சோழிங்கநல்லூர், புழுதிவாக்கம், சுமங்கலி மண்டபத்தில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"



சோழிங்கநல்லூர், செப்.19-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, இடம் : சென்னை மாநகராட்சி 14 மண்டலம், பகுதி 42, புழுதிவாக்கம், மெயின் ரோடு, சுமங்கலி மண்டபத்தில் (செப்டம்பர் :17) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் , சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் மற்றும் 14வது மண்டல குழு தலைவர், எஸ். வி. ரவிச்சந்திரன் வழிகாட்டுதலில்.,186 வது மாமன்ற உறுப்பினர், ஜே.கே.மணிகண்டன் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் ஆணையர், ஆர். முரளி பொதுமக்களிடம் முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்த போது நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேரடியாக சென்று மனுக்களை கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு த்துறை அலுவலர்களிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக் களுக்கு தீர்வு காணப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உழவர் பயிற்சி நிலையம் மூலமாக விவசாயிகளுக்கு கிராம அளவிலான பயிற்சி நடத்தப்பட்டது



சிவகங்கை, செப்.19-

சிவகங்கை மாவட்டம், வேளாண்மைத் துறை உழவர் பயிற்சி நிலையம் மூலமாக 202526 ம் ஆண்டு கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை இணை இயக்குநர் , சிவகங்கை மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்); , சிவகங்கை அறிவுரையின் பேரில் 17.09.2025 அன்று காளையார்கோவில் வட்டாரம் , ஆண்டுச்சிவூரணி கிராமத்தில் பயிற்சி நடைபெற்றது.

இந்த பயிற்சியில் திரு.கா.வீரையா, வேளாண்மை அலுவலர் (உ.ப.நி) கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மைகள் , விவசாயிகள் விதைகள் (வல்லுநர் விதை, அடிப்படை விதை , சான்று விதை) வாங்கும்பொழுது கவனிக்க வேண்டிய முறைகள் பற்றியும் , இயற்கை உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண் வளத்தைப்பெருக்கி இடுபொருட்களுக்கு ஆகும் செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்றும், கோயம்பத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2025 வெளியிட்ட புதிய பயிர்கள் இரகங்கள் பற்றியும் , வேளாண்மையில் நன்மை செய்யும் பூச்சிகள் (குளவி, நாவாய் பூச்சி, சிலந்தி, தரை வண்டு, பச்சை கண்ணாடி இறக்கை பூச்சி மற்றும் ரெட்விட் வண்டு ) கண்டறியும் முறைகள் மற்றும் அதனால் ஏற்படும் பயன்கள் பற்றியும் மற்றும் தாவர பூச்சிக் கொல்லிகள் (வேப்ப எண்ணெய் 3 சதவீதம் , வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவீதம், வேப்பம்பிண்ணாக்கு(100 கிலோ ஏக்கருக்கு)ஃ பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறைகள் பற்றியும் (ஐந்தி லைக்கரைசல், மூலிகைபூச்சி விரட்டி, 3ஜீ பூச்சி விரட்டி) எடுத்து கூறினார்.

மேலும் சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் , அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல் பற்றியும், இயற்கையான முறையில் பயிர்களுக்கு எவ்வாறு உரமிடுதல் பற்றியும், இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தழைச்சத்து உரம் இடுவதையும், உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள் பற்றியும் மற்றும் அனைத்து பயிர்களுக்கு நுண்ணூட்ட உரங்களை இடும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றி எடுத்து கூறினார்.

தோட்டக்கலை உதவி அலுவலர் ஹரிணி அவர்கள் தோட்டக்கலை துறையில் உள்ள திட்டங்களான தேசிய தோட்டக்கலை இயக்கம் , நுண்ணீர் பாசனம் திட்டம் (RKVY-PDMC )> , ஊட்டச்சத்து மேலாண்மை இயக்கம் , ஆகிய திட்டங்கள் பற்றியும் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்து கூறியார்.

மேலும் பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் திருமதி. ஜோதி அசோஸ்பைரில்லம் (நெல்), அசோஸ்பைரில்லம் (இதர பயிர்கள்), பாஸ்போ பாக்டீரியா, அசோபாஸ், ரைசோபியம், சூடோமோனாஸ் உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் பயன்படுத்தும் முறை பற்றியும் செயல்விளக்கங்கள் மூலம் செய்து காண்பித்தார். அட்மா திட்டத்தில் செயல்படுத்தி வரும் விவசாயிகளுக்கான உள் மற்றும் வெளி மாவட்ட வெளி மாநில அளவிலான பயிற்சிகள், கண்டுணர்வு சுற்றுலா மற்றும் செயல்விளக்கங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். இந்த பயிற்சியினை திருமதி .வினிதா ஏற்பாடு செய்திருந்தார்.

# சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, செப்.19-ெ

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பாக செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு அரசு இசேவை மையம் மூலமாக எளிய முறையில் விண்ணப்பித்திடலாம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முதலமைச்சரின் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் சமூக பொருளதார மேம்பாட்டிற்காக தொழில் முனைவுத் திட்டம், நன்னிலம் மகளிர் நில உடமை திட்டம் மற்றும் நிவிகிமிகிசி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களில் பயன்பெற விண்ணப்தாரர்கள் இணையதளம் மற்றும் மாவட்ட மேலாளர் அலுவலகம் வாயிலாக விண்ணப்பங்களை பதிவு செய்து வருகிறார்கள். இதனை எளிமைப்படுத்தும் விதமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள், அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலுள்ள தமிழ்நாடு அரசு இசேவை மையத்தின் வாயிலாக தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் சிவிகிஙிமிஷினி, நிவிகியிகி மற்றும் நன்னிலம் மகளிர் நில உடமை திட்டம் ஆகியவைகளின் கீழ் விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவர்கள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற தமிழ்நாடு அரசு இசேவை மையங்கள் மூலமாக விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல்லில் பெரியாரின் பிறந்த நாள் விழா

திண்டுக்கல், செப்.19-

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பெரியாரின் பிறந்த நாளை முன்னிட்டு கழக துணை பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு இ.பெரியசாமி B.A. BGL, MLA, அவர்கள் , தலைமையில் மற்றும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் அண்ணன் திரு ஐ.பி.செந்தில்குமார் MA. BL MLA அவர்கள் முன்னிலை வகித்து கலைஞர் மாளிகையில் தந்தை பெரியாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து சமூக நீதி நாள் உறுதி ஏற்பு நிகழ்வில் பங்கேற்றனர்... இந்த நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் காமாட்சி,மாவட்ட கழக துணை செயலாளர்கள் நாகராஜன், மார்க்ரேட் மேரி பிலால் உசேன், மாநகர கழக செயலாளர் துணை மேயர் ராஜப்பா, வணக்கத்துக்குரிய மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், மாநகரப் பொருளாளர் சரவணன், பகுதி கழகச் செயலாளர்கள் சந்தோஷ் முத்து,ஜானகிராமன், ராஜேந்திரகுமார், பஜ்லு ல் ஹக், சுசை ராபர்ட் , ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை மற்றும் நகர ஒன்றிய பேரூர் கழகச் செயலாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்..



# சோழிங்கநல்லூர் துரைப்பாக்கம் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" துணை முதல்வர் உதயநிதி ஆய்வு மேற்கொண்டார்

சோழிங்கநல்லூர், செப்.19-

சென்னை தெற்கு மாவட்டம், 15 மண்டலம், சோழிங்கநல்லூர் தொகுதி , எலிம் மெட்ரிகுலேஷன் பள்ளி துறைப்பாக்கம் (செப்.18) "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் நடைபெற்றது. தமிழக முதல்வர், மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க.,கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் முகாமில் ஆய்வு மேற் கொண்டார்., பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து உடனுக்குடன் சில துறைகளின் மூலம் சான்றிதழை வழங்கினார். உடன் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் 15 வது மண்டல குழு தலைவர், வி. இ. மதியழகன் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர். தொடர்ந்து முகாமில் மக்களை தேடி மருத்துவ, பட்டா, ஜாதி சான்றிதழ், மகளிர் உரிமைத்தொகை எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்று பொதுமக்களிடம் கேட்டறிந்து 195 வது மாமன்ற உறுப்பினர்.,ஏகாம்பரம் எடுத்துரைத்தார். முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் பொதுமக்களின் குறைகளை கண்டறிந்து தீர்வு காண தான் இந்த முகாம் என்று தெரிவித்தார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது..

# உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 குறித்து இளம் நுகர்வோர்களிடையே விழிப்புணர்வு



சிவகங்கை, செப்.19-

சிவகங்கை மாவட்டம், உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 குறித்து, இளம் நுகர்வோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, 2025-2026 ஆம் ஆண்டிற்கான புத்தாக்கப் பயிற்சியானது, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் தெரிவிக் கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் ஜ 2019 குறித்து, இளம் நுகர்வோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில், ஒரு நாள் புத்தாக்க பயிற்சியானது இன்றையதினம் நடைபெற்று வருகிறது.

மேலும், ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 24 ஆம் தேதி தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு, பொதுமக்களிடையே பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் நுகர்வோரின் உரிமைகள் ஆகியன குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பொருட்கள் அல்லது சேவைகளைப் பெறுபவர்கள் நுகர்வோர்களாகவும், எந்தவொரு பொருட்களையும் மறுவிற்பனை அல்லது வணிக நோக்கங்களுக்காகப் பெறும் எந்தவொரு நபரும், இலவசமாக பொருட்கள் அல்லது சேவைகளை பெறுபவர்களும் நுகர்வோர் அல்லாதவராகவே கருதப்படுவர்.

இன்றைய காலகட்டத்தில் ஜங்க் புட் (Junk Food) சாப்பிடுவதை வழக்கமாக கொண்டுள்ளதால் ஏற்படும் விளைவுகள் மற்றும் ஆரோக்கிய கேடுகள், நாம் அன்றாடம் உண்ணும் உணவுப் பழக்கத்தில் இருக்கும் சின்ன சின்ன தவறுகள் குறித்து அறிந்து கொண்டு விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அனைவரின் தலையாய கடமையாகும். குறிப்பாக, இளைய தலைமுறையினர் இதில் மிகுந்த கவனமுடன் செயல்படுவது அவசியமாகும்.

இந்நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமானது கடந்த ஆகஸ்டு 9, 2019 அன்று அறிவிக்கப்பட்டு, சூலை 20, 2020 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இச்சட்டமானது, நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும், நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பிரச்சினைகளை உரிய நேரத்தில் திறமையான முறையில் நிர்வகிப்பதற்கும், அதனை தீர்த்து வைப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டதாகும்.

மேலும், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமானது, பாதுகாப்புக்கான உரிமை, தகவல் அறியும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கருத்து கேட்கும் உரிமை, குறை தீர்க்கும் உரிமை, நுகர்வோர் கல்வி உரிமை, நுகர்வோர் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளை தடுத்தல், குறைகளை திறம்பட நிவர்த்தி செய்தல், நுகர்வோர் பிரச்சனைகளுக்கு விரைவான தீர்வு காணுதல், ஒழுங்கு முறை ஆணையத்தை நிறுவுதல்,நவீன சந்தைகளுக்கு ஏற்ப தகவல் மத்தல், நுகர்வோருக்கு அதிகாரமளித்தல், நியாயமற்ற வணிக நடைமுறைகளை கட்டுப்படுத்துதல் போன்ற உரிமைகளைப் பாதுகாப்பதாக அமைந்துள்ளது.

இதன் முக்கிய அம்சங்கள், நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள், நுகர்வோர் பாதுகாப்பு குழு ஆகியன குறித்து, இப்புத்தாக்க பயிற்சியின் வாயிலாக இளம் தலைமுறை நுகர்வோர்களுக்கு, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்2019 மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து, தன்னார்வ நுகர்வோர் அமைப்புக்களைச் சார்ந்தோர் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்கள் வாயிலாக எடுத்துரைக்கப்படவுள்ளது.

இப்புத்தாக்க பயிற்சியில் கலந்து கொண்டுள்ள இளம் தலைமுறை நுகர்வோர்களாகிய நீங்கள் இதன் முக்கியத்துவத்தினை அறிந்து கொண்டு, தாங்கள் பயன்படுவதோடு மட்டுமல்லாமல், தங்களைச் சார்ந்தோர்களுக்கும் இது குறித்து எடுத்துரைத்து பயன்பெறச் செய்தல் வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர், மரு.எஸ்.செல்வசுரபி மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் இரா.இராஜா, மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணைய உறுப்பினர் எஸ்.குட்வின் சாலமன்ராஜ், உணவுப் பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் பே. விஜயகுமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் மு.நந்தர்ஷா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம் வட்டாட்சியர் எஸ்.ஏ.எச்.முபாரக் உசேன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புக்களைச் சார்ந்த பொறுப்பாளர்கள், பள்ளி , கல்லூரி மாணாக்கர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, செப்.19-

சிவகங்கை மாவட்டத்தில், 2024- 2026 ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.காந்திராஜன் அவர்கள் (வேடசந்தூர் தொகுதி) தலைமையில், குழு உறுப்பினர்களான திரு.கு.செல்வபெருந்தகை அவர்கள் (ஸ்ரீ பெரும்புதூர் தொகுதி), திரு.ஏ.பி.நந்தகுமார் அவர்கள் (அணைக்கட்டு தொகுதி) , திரு.எஸ்.அம்பேத்குமார் அவர்கள் (வந்தவாசி தொகுதி), திரு.பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள் (கவுண்டம்பாளையம் தொகுதி), திரு.தா. உதயசூரியன் அவர்கள் (சங்கராபுரம் தொகுதி), திரு.இராம.கருமாணிக்கம் அவர்கள் (திருவாடானை தொகுதி), திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் (இராமநாதபுரம் தொகுதி), டாக்டர் தி.சதன் திருமலைக்குமார் அவர்கள் (வாசுதேவநல்லூர் தொகுதி), திரு.மா.சின்னதுரை அவர்கள் (கந்தர்வ கோட்டை தொகுதி), திரு.எஸ். சுதர்சனம் (மாதவரம் தொகுதி), திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் (மதுரை மேற்கு தொகுதி), திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் (ஆரணி தொகுதி), திரு.மு.பன்னீர்செல்வம் அவர்கள் (சீர்காழி தொகுதி), திரு.எஸ்.எஸ்.பாலாஜி அவர்கள் (திருப்போரூர் தொகுதி), திரு.ஓ.எஸ். மணியன் அவர்கள் (வேதாரண்யம் தொகுதி), திரு.ஈ.ராஜா அவர்கள் (சங்கரன்கோவில் தொகுதி), திரு.எஸ்.பி.வெங்கடேஷ்வரன் அவர்கள் (தருமபுரி தொகுதி) ஆகியோர்களுடன் நாளையதினம் (19.9.2025) சிவகங்கை மாவட்டத்தில் அரசின் பல்வேறு துறைகளின்கீழ் நிறைவேற்றுப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்தும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளவுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், அனைத்துத் துறை அரசு முதல்நிலை அலுவலர்களுடன் மாலை 03.00 மணியளவில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் ஆய்வு கூட்டம் மேற்கொண்டு, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறவுள்ளனர். பொதுமக்கள் தங்களின் கோரிக்கை மனுக்களை தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மதிப்பீட்டுக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களிடம் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




# குடியாத்தத்தில், புதிய நீதி கட்சி சார்பில், உலகம் போற்றும் உலகத் தலைவர் பாரத பிரதமர் நரேந்திர மோடிஜியின் 75ம் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

குடியாத்தம், செப்.19-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் நகரம் புதிய நீதி கட்சியின் சார்பில், உலகம் போற்றும் உலகத் தலைவர் பாரத பிரதமர் நரேந்திர மோடிஜி யின் 75ம் பிறந்தநாள் விழா கொண்டாட்டம், புதிய நீதி கட்சியின் நிறுவனத் தலைவர் பெருமதிப்பிற்குரிய ஏ.சி.சண்முகம் அவர்களின் நல்வாழ்த்துகளுடன், பாரத பிரதமர் மோடிஜியின் பிறந்தநாள் விழா, நகர செயலாளரும், கைத்தறி காவலனுமான எஸ்.ரமேஷ் தலைமையிலும், மண்டல செயலாளர் பி.சரவணன் முன்னிலையிலும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது, இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக பாரதிய ஜனதா கட்சியின் நகர தலைவர் எம்.கே. ஜெகன், மாவட்ட செயலாளர்கள் சாய். எஸ்.ஆனந்தன், ஸ்ரீகாந்த், சுசில்குமார் புதிய நிதி கட்சியின் பொறுப்பாளர்கள் சசிகுமார், வெங்கடேசன், கன்னியப்பன், செந்தில்குமார், செல்வம், சுந்தர்ராஜன், மோகன், திருநாவுக்கரசு, கார்த்திகேயன், சி.வெங்கடேசன், ராமு, ஹேமலதா மற்றும் பாஜக நிர்வாகிகள் பிரபாகரன், கணேசன், பாலாஜி, இளங்கோ, ராஜா, மணிகண்டன் மற்றும் புதிய நீதி கட்சி மற்றும் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டு பாரதப் பிரதமரின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர்.




# குடியாத்தம், வளத்தூர் ஊராட்சியில் தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், செப்.19-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, வளத்தூர் ஊராட்சி, வளத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதி மக்களின் அடிப்படை வசதிக்காக, தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் என்னும் திட்டத்தில் மக்களின் கோரிக்கைகளை உடனடியாக தீர்வு காணும் முகாமினை குடியாத்தம் வட்டார வளர்ச்சி அலுவலர்களா செல்வக்குமார், சரவணன் ஆகியோ தலைமையில் நடைபெற்றது.

இந்த முகாமில் குடியாத்தம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஆனந்தி முருகானந்தம், தாசில்தார் பழனி ஆகியோர் முகாமில் கலந்து கொண்டு நிகழ்ச்சி தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று இணையத்தில் பதிவேற்றம் செய்து கொண்டனர். இந்நிகழ்வின் போது குடியாத்தம் ஒன்றிய குழு உறுப்பினர் பிரியா சக்திவேல், வளத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் நிர்மலா சேட்டு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இநிகழ்ச்சியில் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் கோடீஸ்வரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மீனா, வளத்தூர் வருவாய் ஆய்வாளர் புகழரசன், கிராம நிர்வாக அலுவலர்கள் சசிகுமார், அருள், பிரகாசம், காந்தி, ரமேஷ், விஜயேந்திரம், ஊராட்சி எழுத்தார் ஆர்.ரேவதி முகாமில் கலந்து கொண்டனர். இம்முகாமில் மகளிர் உரிமை தொகை முதியோர் ஓய்வூதியம், குடும்ப அட்டை, இலவச வீட்டு மனை பட்டாக்கள் பெயர் மாற்றம், மின் சம்பந்தப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை பொதுமக்கள் மனுக்களை முகாமில் கொடுத்தனர். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற செயலாளர் ரேவதி துணைத் தலைவர் வாசுதேவன் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள், அரசு அதிகாரிகள் மருத்துவர்கள் செவிலியர்கள் ஊராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் வளத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதி பொதுமக்கள் என பலர் இம்முகாமில் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் நேர கட்டுப்பாட்டை மீறி ஊருக்குள் நுழையும் கனரக வாகனங்களுக்கு போக்குவரத்து போலீசார் அபராதம்

## கன்னியாகுமரி போக்குவரத்து போலீசார் அதிரடி



கன்னியாகுமரி, செப்.19-

கன்னியாகுமரி மாவட்டத்தில் அடுத்தடுத்து டாரஸ் லாரிகளால் உயிர் பலிகள் நிகழ்ந்ததை தொடர்ந்து, பல்வேறு கட்டுப்பாடுகள் அமலில் உள்ளது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் உத்தரவின் பேரில் சோதனை சாவடிகளில் கூடுதல் போலீசார் நிறுத்தப்பட்டு கண்காணித்து வருகிறார்கள். குமரி மாவட்டத்தில் இருந்து கேரளாவுக்கு கனிமங்கள் கொண்டு செல்லும் லாரிகளால் ஏற்படும் விபத்துகளை தடுக்க போக்குவரத்து போலீசார் பல்வேறு நடவடிக் கைகள் மேற்கொண்டு வருகின்றனர். கனிம வள சரக்கு காலி வாகனங்கள் இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை மட்டும் இயங்க அனுமதிக்கப்படும். கனிம வளங்களை ஏற்றி செல்லும் சரக்கு வாகனங்கள் காலை 7 மணி முதல் காலை 10 மணி வரையிலும், பிற்பகல் 3 மணி முதல் இரவு 6 மணி வரையிலும் மாவட்டத்துக்குள் நுழைய தடை அமல்படுத்தப்பட்டு வருகிறது இந்த நிலையில் கன்னியாகுமரி அருகே மணக்குடி பகுதியில் உதவி காவல் ஆய்வாளர் ஜெயபிரகாஷ் தலைமையிலான போக்குவரத்து போலீசார் நேற்று காலை அதிரடி சோதனைகளில் ஈடுபட்டனர். நேர கட்டுப் பாட்டை மீறி ஊருக்குள் நுழைந்த 20 க்கும் மேற்பட்ட டாரஸ் லாரிகளை போக்குவரத்து போலீசார் தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டு அபராதம் விதித்தனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் 15.07.2025 முதல் 15.11.2025 வரை நகரம் மற்றும் ஊரக பஞ்சாயத் வாயியாக முகாம்கள் நடைபெறுகிறது மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

திருப்பூர், செப்.19-

திருப்பூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் 15.07.2025 முதல் 15.11.2025 வரை நகரம் மற்றும் ஊரக பஞ்சாயத் வாயியாக முகாம்கள் நடைபெறுகிறது. தற்பொழுது நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் பங்கேற்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்கில் உள்ள மாவட்ட தொழில் மைய அலுவலர்களை அணுகி இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம். நடைபெறும் அனைத்து முகாம்களிலும் தொழில் செய்ய விருப்பம் உள்ள நபர்கள் கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் தொழில் துவங்கி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

- உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் மட்டும்
- முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருத்தல் வேண்டும்
- வயது வரம்பு பொது பிரிவு 21 முதல் 45 வரை சிறப்பு பிரிவு மற்றும் மகளிருக்கு 21 முதல் 55 வயது வரை
- கல்வி தகுதி குறைந்தபட்சம் மேல்நிலை பள்ளிகளில் தேர்ச்சி / பட்டய படிப்பு / ஐடிஐ / தொழில்பயிற்சி / பட்டப்படிப்பு
- தேவையான ஆவணங்கள் : ஆதார் அட்டை, குடும்ப அட்டை, மாற்றுச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், திட்ட அறிக்கை மற்றும் விலைப்புள்ளி.

கலைஞர் கைவினைத் திட்டம் (KKT)

- ஆதார் அட்டை, குடும்ப அட்டை, விலைப் புள்ளி, வங்கி புத்தகம்
- குறைந்தபட்சம் 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்
- 5 ஆண்டுகள் முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்

வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

- வர்த்தகம் சார்ந்த தொழில்கள் மட்டும்
- வயது வரம்பு பொது பிரிவு 18 முதல் 45 வரை சிறப்பு பிரிவு மற்றும் மகளிருக்கு 18 முதல் 55 வயது வரை
- கல்வித் தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சி
- ஆண்டு வருமான 8 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்
- திட்ட மதிப்பீடு அதிகபட்சம் ரூ.15 இலட்சம்
- தேவையான ஆவணங்கள் : ஆதார் அட்டை, குடும்ப அட்டை, மாற்றுச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் விலைப் புள்ளி.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS)

- ஆதிதிராவிடர் / பழங்குடியின தொழில் முனைவோர்
- வயது வரம்பு 18 முதல் 55 வயது வரை
- கல்வித் தகுதி தேவையில்லை
- ஆண்டு வருமானத்தில் உச்ச வரம்பு இல்லை
- திட்ட மதிப்பீட உச்ச வரம்பு இல்லை
- தேவையான ஆவணங்கள் : சாதிச்சான்றிதழ், பள்ளி மாற்றுச் சான்றிதழ், ஆதார் அட்டை, திட்ட அறிக்கை, இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கான விலைப் புள்ளி, வாடகை ஒப்பந்த பத்திரம், கட்டிட மதிப்பீடு திட்ட மதிப்பீட்டில் நிலத்தின் ஒப்பந்த நகல்.

தகுதியான பொது மக்கள் இத்திட்டத்தின் மூலம் புதிய தொழில் துவங்கவும், தொழிலை மேம்படுத்தவும் பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே அழைப்பு விடுத்துள்ளார்கள்.

மேலும் விவரங்கள் பெறவும், கூடுதல் வழிகாட்டுதலுக்கும் 0421 2475007, 89255 34024, 8925534025 ஆகிய அலுவலக எண்களை தொடர்பு கொள்ளலாம்.





■ இராமநாதபுரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் /முதஸ்ன்மை மாவட்ட நீதிபதி மெகபூப் அலிகான் மற்றும் செயலாளர்/சார்பு நீதிபதி பாஸ்கர் அறிவுறுத்தலின் பேரில் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையக் குழுவின் வழிகாட்டுதலின்படியும் plan of action - 2025-2026 ன் படியும் பரமக்குடி வட்ட சட்ட பணிகள் குழுவின் தலைவர் சார்பு நீதிபதி அறிவு உத்தரவின் பேரிலும் 17.09.2025 ல் ஆயிர வைசிய கல்வியல் கல்லூரி பரமக்குடி இல் சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில் செயலாளர்/சார்பு நீதிபதி பாஸ்கர் மற்றும் வழக்கறிஞர் கோகிலா தேவி சட்டவிழிப்புணர்வு உரையாற்றினார் கல்லூரி நிர்வாகிகள், முதல்வர், ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். இம்முகாமிற்கான ஏற்பாட்டினை சட்டத் தன்னார்வலர் சங்கர் செய்திருந்தார்.





# வேன்கார்டு அகாடமி பள்ளியை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்

கோவை, செப்.19-

கோவை மாவட்டம் பள்ளி மாணவர்களுக்கு உயர்தரமான கல்வி எளிதில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் துவக்கப்பட்ட டாக்டர் என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் கீழ் பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடத்திட்டத்தை அளிக்கும் வேன்கார்டு அகாடமி என்ற பெயரில் ஒரு புதிய பள்ளி கட்டிடம் காளப்பட்டியில் துவங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு புதிய பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் நல்லா ஜி பழனிசாமி தலைவர், கேஎம்சிஹெச் - டாக்டர் என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளை, டாக்டர் தவமணி தேவி பழனிசாமி துணைத் தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர், டாக்டர் என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளை, டாக்டர் அருண் பழனிசாமி, செயல் இயக்குனர், கேஎம்சிஹெச் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் மேலும் 2025 26 கல்வியாண்டில் சிறு குழந்தைகளுக்கான சேர்க்கை விரைவில் துவங்கும் எனவும் 2026 27 கல்வியாண்டில் 8ம் வகுப்பு வரை சேர்க்கை நடைபெறும் எனவும் பள்ளி நிர்வாகத் தரப்பில் தெரிவிக்க பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது




# காட்பாடி காந்திநகர் திமுக பகுதி கழக சார்பில் பெரியார் பிறந்தநாள் விழா

வேலூர், செப்.19-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி காந்திநகர், பகுதி கழக திமுக சார்பில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா, பகுதி கழக செயலாளர் பரமசிவம் தலைமையில், அவரது திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றிய திமுக செயலாளர் தயாநிதி, மாநகர துணை செயலாளர் தேவநேசன், ஆர்.பி.ரமேஷ், வட்ட செயலாளர் ஜேசிபி சுரேஷ், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஆர்.விஜயகுமாரி மற்றும் திமுக நிர்வாகிகள் உறுப் பினர்கள் என பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.







# மானாமதுரையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

மானாமதுரை, செப்.19-

சிவகங்கை ஒருங்கிணைந்த மாவட்டத்தின் சார்பாக சாதிவெறியர்களால் படுகொலையான மானாமதுரை வட்டம். அன்னவாசல் கிராமம் இளைஞர் காளீஸ்வரன் படுகொலையை கண்டித்தும். சாதி வெறியர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோரியும் மானாமதுரை பழைய பேருந்து நிலையம் அருகே விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மானாமதுரை மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. மாநில கருத்தியல் பரப்பு துணைச்செயலாளர் செல்லப்பாண்டியன், விசிக சிவகங்கை மாவட்ட செயலாளர் வழ .வே. பாலையா மாநில துணைச் செயலாளர் பெரியசாமி வழக்கறிஞரணி மாநில துணைச் செயலாளர் வழ.அய்யனார் மாவட்ட செய்தித்தொடர்பாளர் மூ.ஆதிவளவன் கண்டன உரையாற்றினார். கட்சியின் மாநில,மாவட்ட,ஒன்றிய, பொருப்பாளர்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.

# போக்சோ வழக்கில் குற்றவாளிக்கு தண்டனை வாங்கி கொடுத்த காவல் ஆய்வாளருக்கு பாராட்டு

காரைக்குடி, செப்.19-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வைரவபுரத்தைச் சேர்ந்தவர் பாண்டி (38) இவர் கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் தேதி கல்லலில் ஒரு வீட்டில் டைல்ஸ் ஒட்ட சென்றிருந்தவர் அந்த வீட்டில் உள்ள 17 வயதுள்ள சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது தொடர்பாக தேவகோட்டை மகளிர் போலீஸ் காவல்நிலையத்தில் பெற்றோர்கள் அளித்த புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் மகேஸ்வரி விசாரணை நடத்தி பாண்டியை கைது



செய்து சிவகங்கையில் உள்ள போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர் வழக்கு நீதிமன்ற விசாரணை செய்யப்பட்டு இருந்த நிலையில் வழக்கை விசாரணை செய்த நீதிபதி கோகுல் முருகன் குற்றம் சாட்டப்பட்ட பாண்டிக்கு. 7 ஆண்டுகள் சிறை தண்டனையும் 15 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு ஒரு லட்சம் இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டார் மேலும் இந்த வழக்கானது ஜனவரி மாதம் வழக்கு பதிவு செய்யப்பட்டு செப்டம்பர் மாதம் 9 மாதத்தில் தண்டனை வாங்கிக் கொடுக்க உறுதுணையாக இருந்த தேவகோட்டை மகளிர் காவல் ஆய்வாளர் சொ.. மகேஸ்வரிக்கு உயர் அதிகாரிகள் தங்களது பாராட்டுகளை தெரிவித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161